முருகப்பெருமான் துணை

**மகான் குங்கிலியக்கலைய நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.02.2023, ஞாயிற்றுக்கிழமை

1. கருணை வடிவான அரங்கனே
கந்தப்பெருமானின் அவதாரமே
தரும வேலியிட்டு காத்தருளும்
தவராஜனே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
ஆசிபட சுபகிருது சால் திங்கள்
அய்யமற சப்தம திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 07 ம் நாள், 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் குங்கிலியக்கலைய நாயனாரும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
சோரம் போகா பிறவிப் பயனடைய
செகத்தோர் அவதார ஞானி அரங்கன்
4. அரங்கன் திருவடி பற்றிவர
அருளுபதேச ஞான வழிகளை
வரங்களென ஏற்று வருகவே
வரவர வந்த நோக்கம் தேறி
5. தேறியே இனி பிறவா கதிக்கு
தொண்டுடன் கூடிய தேடலாக
மாறியே செயல்கள் அனைத்தும்
மாதவசியின் சூட்சும இயக்கமாகி
6. ஆகியே தொடரும் மக்களுக்கு
அருள்பொருள் வளம் கூடும்
அகிலம் எங்கிலும் இந்த மாற்றம்
அனைவருக்கும் அரங்கன் ஆற்றலாக
7. ஆற்றலாகப் பெருகி இனிதே
ஆறுமுகனார் வழிபாடு கொண்ட
மாற்றமாக எங்கும் நிரம்பி
மண்ணுலகம் பாதுகாப்பு காண்கும்
8. காண்கவே அரங்கன் அவதார
காரியங்கள் வெற்றி காண
ஆன்மீக அரசியல் களமுமாக
அன்பர்கள் ஒன்றிணைந்து காண
9. காணவே ஆளுமை தன்னிலும்
கடமை ஆற்றா தலைமைகட்கு
ஞானம் வழங்கும் சக்திகளாக
ஞானவான்கள் படைகளாகி

10. ஆகியே அரங்கன் வழிகாட்டலில்
அற்புதம் தனை உலகமடைந்து
வகைபட ஞான ஆட்சியாக
வல்லமைமிக்க ஞானிகள் ஆட்சியாக

11. ஆகவே உலகமாற்றம் நடக்கும்
ஆளுமைகளும் நல் வழிக்குவர
யுகமே ஞானயுகமாக மாறும்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–